குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்
நிறுவனங்கள் துறை

மானியக் கோரிக்கை எண். 44

# புதிய அறிவிப்புகள்
## 2011–12

**சி. சண்முகவேலு**
அமைச்சர் (ஊரகத் தொழில்)

## 2011–12 ஆம் நிதியாண்டிற்கான புதிய அறிவிப்புகள்

**1. அரியலூர் மாவட்டத்தில் புதியதாக மாவட்டத் தொழில் மைய அலுவலகம் அமைத்தல்**

மாநிலத்தில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டத் தொழில் மைய அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் மண்டல இணை இயக்குநர் அலுவலகம் இயங்கி வருகிறது. புதியதாக அமைக்கப்பட்ட அரியலூர் மாவட்டத் தொழில் மையப் பணிகள் தற்போது பெரம்பலூர் மாவட்ட தொழில் மையம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரியலூர் மாவட்டத்திலும் புதியதாக மாவட்ட தொழில் மையம் அலுவலகம் இந்த ஆண்டில் உருவாக்கப்படும்.

**2. மாவட்டந்தோறும் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த தொழில் வளர்ச்சி ஆலோசனைக் குழு அமைத்தல்**

மாவட்டந்தோறும் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் அரசு அலுவலர்கள் தொழில் நிறுவன சங்க உறுப்பினர்கள், கல்வியாளர்கள், வங்கி அலுவலர்கள் இவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட **“தொழில் வளர்ச்சி ஆலோசனைக்குழு“** அமைக்கப்படும். இக்குழு மாதத்திற்கு ஒரு முறை கூடி ஒவ்வொரு மாவட்டத்திலும் புதியதாக அமைக்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கான அனுமதிகளை ஒற்றைச் சாளர முறையில் விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

**3. ஊடகங்கள் மூலமாக ‘‘ஊட்டி டீ‘‘ யை விளம்பரம் செய்தல்**

இண்ட்கோசர்வால் தயாரிக்கப்படும் ‘‘ஊட்டி டீ‘‘, தமிழகத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்படும் நியாய விலைக்கடைகள் வாயிலாக, பொது விநியோகத்திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஊட்டி தேயிலையை வானொலி,

தொலைக்காட்சி, பத்திரிகைகள் உட்பட அனைத்து ஊடகங்கள் மூலமாக பொது மக்களிடையே விளம்பரப்படுத்தி அதன் விற்பனையை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**4. ஸ்பார்ட்டி திட்டத்தின் கீழ் இரண்டு புதிய கயிறு குழுமங்கள் அமைத்தல்**

பாரம்பரிய கயிறுத் தொழில்களுக்குப் புத்துயிரூட்டும் திட்டத்தின் கீழ் (ஸ்பார்ட்டி), இரண்டு புதிய கயிறு குழுமங்கள் தலா ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில், கயிறு வாரியத்தின் உதவியுடன் கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்குழுமங்களில் ஏற்றுமதிக்குரிய மதிப்புக்கூட்டப்பட்ட கயிறு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பொது வசதி மையங்கள் ஏற்படுத்தப்படும்.

**5. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவிகித வட்டி தள்ளுபடியில் கடன் வழங்குதல்**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்துறையில் முதலீடுகளை ஊக்குவிக்க கூடுதல் ஊக்க உதவிகள் வழங்குவதற்கான வழிவகைகள் ஆராய்வதற்காக முதற்கட்டமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவிகித வட்டி தள்ளுபடியில் கடன் வழங்கப்படும்.

**6. தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்**

(அ) தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், 2011–12 ஆம் ஆண்டில், 800 பட்டப்படிப்பு பயின்ற வேலையில்லா இளைஞர்களுக்கு மிகப் பெரிய அளவில் தொழில்முனைவோர்களுக்கான பயிற்சியினை அரசு நடத்த உள்ளது. இவர்களில், 125 நபர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். மத்திய அரசு உதவியோடு நடத்தவுள்ள இப்பயிற்சிக்கான செலவு சுமார் ரூபாய் ஒரு கோடியாகும்.

(ஆ) மேலும், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்திற்கான நிருவாகம் மற்றும் பணியாளர் செலவுகளை ஈடுசெய்ய ஆண்டொன்றிற்கு ரூபாய் ஒரு கோடிக்கு மிகாமல் நிதி உதவி மானியமாக அரசால் வழங்கப்படும்.

**7. மாற்றுத் திறனாளிகள் செய்யத்தக்க தொழில் வகைகளை கண்டறிய ஆய்வு மேற்கொள்ளல்**

மாற்றுத் திறனாளிகளுக்கு சுய வேலை வாய்ப்பு உள்ளிட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும் நோக்குடன் அவர்கள் செய்யத் தக்க தொழில்களை கண்டறிவதற்காக இத்துறை மூலம் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும்.

**8. காக்களூர் மத்திய மின் பொருள் பரிசோதனை கூடத்தை விரிவாக்கம் செய்தல்**

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இலவச உணவுகலவி (மிக்ஸி), ஈர அரவை இயந்திரம் (வெட் கிரைண்டர்) மற்றும் மேஜை மின் விசிறி ஆகியவற்றின் மாதிரிகளை பரிசோதனை செய்யும் பொருட்டு காக்களூர், மத்திய மின் பொருள் பரிசோதனைக் கூடத்தில் ரூ.63 இலட்சங்கள் மதிப்பில் கூடுதல் உபகரணங்கள் வாங்கப்படும்.

**9. 5 சிட்கோ தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

நடப்பு நிதியாண்டில் கீழ்க்கண்ட 5 சிட்கோ தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டச் செலவான ரூ.150 இலட்சத்தில், தமிழக அரசின் பங்காக ரூ.30 இலட்சம் வழங்கி, பணிகள் நிறைவேற்றப்படும்:-

(1) மார்த்தாண்டம், கன்னியாகுமரி மாவட்டம்

(2) கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்

(3) ஆர். கே. பேட்டை, திருவள்ளூர் மாவட்டம்

(4) திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்

(5) உரப்புளி, இராமநாதபுரம் மாவட்டம்

**சி. சண்முகவேலு**
அமைச்சர் (ஊரகத் தொழில்)